# செம்பதாகை

மலர்: 1
இதழ்: 2
மாசி: 1
விலை சதம்: 50
(79-02-01)

புரட்சிகர வெகுஜன ஏடு


★ வேலை இல்லாதோர் 15 லட்சம் ★ வாழ்க்கைச் செலவு வானைத் தொடுகிறது ★ உழைக்கும் வர்க்கம் ஒடுக்கப்படுகிறது ★ அடக்குமுறைகள் அதிகரிக்கின்றன

# சுதந்திரம் யாருக்கு?

சுதந்திரம் பற்றி அடிக்கடி நமது நாட்டில் பேசப்படுகின்றது. அதன் பெயரால் விழாக்களும், விமரிசைகளும் கொண்டாடப்படுகின்றன. ஆட்சியில் உள்ளவர்களும், அதிகாரத்திற்கு வருபவர்களும் மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது தமது தலையாய கடமை என்று கூறிக் கொள்கின்றனர். ஆனால் இவர்கள் கூறும் சுதந்திரத்தை அனுபவித்ததன் மூலம் எமது நாட்டு மக்கள் என்ன பல்பலன்களைப் பெற்றுள்ளார்கள் என்பது இன்று மிகப் பெரும் கேள்விக் குறியாக உள்ளது.

சுதந்திரம் நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமானது. அதை அனுபவிப்பதில் எவருக்கும் பாகுபாடு இல்லை. சுதந்திரத்தின் முன் சகலரும் சமம். கிடைத்த சுதந்திரத்தை சகலரும் அனுபவிக்கும் விதத்தில் அர்த்தமுள்ளதொன்றாக்குவதே எமது நோக்கம் என்றெல்லாம் கூறக் கேட்டுள்ளோம். ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளில் இவ்விதமான சொற்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன? சுதந்திரம் சகலருக்கும் சமமானதாகப், பொதுவானதாக இருந்ததா? அல்லது நமது நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு அர்த்தமுள்ளதொன்றாக இருந்ததா? என்ற கேள்விகளை கேட்டால் இல்லை என்பதே சரியான பதிலாக இருக்க முடியும்.

சுதந்திரம் ஒரு பொழுதும் நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமானதாக இருந்ததில்லை, ஏனெனில் நாம் ஒரு வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வர்க்க சமுதாயத்தில் எப்பொழுதும் சுதந்திரம் எல்லா வர்க்கங்களுக்கும் சமமானதாக இருக்க முடியாது. அது ஏதாவது ஒரு வர்க்கத்திற்குச் சாதகமாகவே செயல்படுத்தப்பட்டு வரும். நமது நாட்டில் இச் சுதந்திரம் எப்பொழுதும் ஆளும் வர்க்க சார்பானதாகவே இருந்து வந்துள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளிலும் கூட சுதந்திரம் பற்றி மக்களை ஏமாற்றும் விதத்தில் வெறும் உச்சாடனங்கள் சொல்லப்பட்டதே தவிர அடிப்படையில் சுதந்திரம் ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு பலன் உள்ளதாக இருக்கவில்லை.

ஆளும் வர்க்கம் சுதந்திரத்தைதான் பிரதிநிதித்துவம் செய்யும் சொத்துடைய வர்க்கத்திற்கு அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொடுத்துள்ளது. பெரும் முதலாளிகள், பெரு நிலச் சொந்தக்காரர்கள், அந்நிய முதலீட்டாளர்கள், ஏகாதிபத்தியவாதிகள், சொத்துடைமைகள் உள்ளோர் போன்ற வர்க்கப் பகுதியினருக்கு நமது நாட்டில் சுதந்திரம் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டது. இன்னும் அவர்களுக்கு அது பயன் உள்ளதாகவே இருந்து வருகின்றது. தமக்கு ஏற்கனவே இருந்த சொத்துடைமைகளைப் பாதுகாப்பதற்கு, புதிய சொத்துடைமைகளை சேர்ப்பதற்கு, சொத்துக்களை மேன்மேலும் பெருக்கும் வழிகளில் நம் நாட்டு மக்களின் ஏகப் பெரும்பான்மையினரைச் சுரண்டுவதற்கு, தேவை ஏற்படும்போது மக்களை அடக்குவதற்கு, அவர்களின் உழைப்பை அபகரிப்பதற்கு, தமது ஆளும் வர்க்க அதிகாரப்பிடியை மக்களின் மீது சமாதான வழிகளிலும் — பலாத்கார வழிகளிலும் இறுக்கி வைத்திருப்பதற்கு எல்லாம் சுதந்திரம் இருந்தது. இன்றும் இருந்து வருகின்றது.

சொத்துடையோர் சுகபோகம் அனுபவிப்போர், ஆடம்பரங்களைத் தேடிக் கொள்வோர் அவற்றுக்கா நம் நாட்டு மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டிச் சூறையாடுவோர் நமது சமுதாயத்தின் பத்து வீதத்திற்கு உட்பட்டோரே யாவர். ஏனைய தொண்ணூறு வீதமான தமிழ்சிங்கள மக்கள் இன்று கூறப்படும் சுதந்திரத்தின் கீழ் எண்ணற்ற பிரச்சனைகளின் கொடுமைகளால் நாளாந்தம் சித்திரவதைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களாகவே உள்ளனர். ஒரு சிறு பகுதிக்கு சுதந்தரம் சொர்க்க வாழ்வைக் கொடுத்துள்ளது. அதே சுதந்திரம் ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு நரகவாழ்வை அளித்துள்ளது.

நம் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு உடை, இருப்பிடம், சிறந்த சுகாதார — கல்விவசதிகள் போன்றவை மக்களால் பெறமுடியவில்லை. தாம் அவர்கள் வாழ்க்கையின் தேவைகளை பெற முடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். வாழ்க்கைச் செலவின் அளவுக்கு ஊதியம் உயர்த்தப்படுவதில்லை சுதந்திரம் ஒரு சிறு பகுதியினருக்காக இருந்து வருவதால் வேலை இன்மை வருடா வருடம் பெருகி வருகின்றது. வேலை இன்மையின் விரக்தி சமுதாயத்தின் இளைஞர்பகுதியில் பெரும்

(6 ம் பக்கம் பார்க்க)

## யூ. என். பி. ஆட்சியே!

# தரப்படுத்தலை உடனே நிறுத்து தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்காதே!

கடந்த அரசாங்கம் பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்தது. அதனால் தமிழ் மாணவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழ் மக்கள் அதிருப்தி கொண்டவர்களாகக் காணப்பட்டனர். அவற்றின் எதிரொலியினை கடந்த கால ஆட்சியின் போது இந்நாடு கண்டது. யூ. என். பி ஆட்சிக்கு வந்ததும் முந்திய அரசு தமிழ் மாணவர்களுக்கு

## அமிர்தலிங்கம் யார் பக்கம்?

அநீதி விளைவித்தது என்று கூறி பெரும் பிரச்சாரங்களின் மத்தியில் தரப்படுத்தல் முறையை நீக்கியது. அன்று நீக்கிய தரப்படுத்தல் முறையை ஒன்றரை வருடங்கள் கழித்து யூ.என்.பி அரசாங்கம் மீண்டும் கொண்டு வந்துள்ளது. இதில் முக்கிய அம்சம் என்னவெனில் கடந்த அரசு நடைமுறைப்படுத்திய தரப்படுத்தலை விட இன்றைய தரப்படுத்தல் மிகவும் மோசமான முறையில் தமிழ் மாணவர்களைப் பாதிப்பதாக உள்ளதாகும். இன்றைய தரப்படுத்தல் முறையில் பின் தங்கிய மாவட்டங்களுக்கான சலுகைகள் குறைக்கப்பட்டுள்ளன. அதே வேளை இன அடிப்படையிலான தரப்படுத்தலே முதன்மை பெறுகின்றது.

கடந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்திய தரப்படுத்தல் முறையால் தமிழ் மாணவர்கள் இளைஞர்கள் பெரும் அதிருப்திக்குள்ளானார்கள். அது மட்டுமன்றி அவர்கள் அதிதீவிர நிலைமைகளுக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறு ஒரு இனத்திற்கு எதிரான அரசாங்களின் புறக்கணிப்புகளும், பாகுபடுத்தல்களும் நாளடைவில் முழு அளவிலான இனக் குரோதமாகவும், இனக்கலவரங்களாகவும் வளர்ந்துவந்துள்ளது நமது நாட்டின் கடந்த கால— நிகழ் கால அனுபவங்களாகும்.

எனவே தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்கும் பல்கலைக் கழக அனுமதியில் கொண்டுரப்பட்டிருக்கும் தரப்படுத்தல் முறையை உடன் நிறுத்தி அதற்குப் பதிலாக நீதியான முறையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்ற குரல் தமிழ் மக்கள்— இளைஞர்கள் மத்தியில் உருவாகி உள்ளது

தமிழ் இளைஞர்கள் தமது நியாயமான கோரிக்கையை முன் வைத்து அதற்கான ஒரு இயக்கத்தை நடத்துவதை யாரும் தடை செய்யமுடியாது. 'தனி மனித சுதந்திரம்' 'கருத்துச் சுதந்திரம்' 'ஜனநாயகம்' என்றெல்லாம் உரக்கக் கூறும் இன்றைய அரசு தமக்கு இழைக்கப்படும் அநீதியைத் தட்டிக் கேட்கும் உரிமையைப்பாவித்தற்காக மாணவர்களை பழிவாங்குவது எந்த வித 'தார்மீகம்' என்றே மக்கள் கேட்கின்றனர். எனவே மாணவர்கள்— ஆசிரியர்கள் மீது அரசு எவ்வித பழிவாங்கலையும் செய்யக் கூடாது. மாணவர்களை இந் நிலைமைக்குத் தள்ளிய தரப்படுத்தலை தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படாதவகையிலும், பின் தங்கிய மாவட்ட

(6 ம் பக்கம் பார்க்க)

# இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம்

கடந்த ஆண்டு பிற்பகுதியில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பிரதிநிதிகள் மாநாட்டின் முடிவிற்கு இணங்க வாலிபர் இயக்கத்தின் பெயர் இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம் என்ற பெயரைக் கொண்டு இயங்குவது என வாலிபர் இயக்கம் முடிவுசெய்தது. கட்சி மாநாட்டில் முன் வைக்கப்பட்ட மேற்படி பெயர் மாற்றத்திற்கான காரணத்தையும், பெயரையும் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள வாலிபர் இயக்கக் கிளைகள் பரிசீலனை செய்தன. கொழும்பு, பதுளை அட்டன், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பரவலாக நடைபெற்ற வாலிபர் இயக்கத்தின் விரிவுபடுத்தப்பட்ட கூட்டங்களில் மேற்படி பெயர் அங்கீகரிக்கப்பட்டன.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தலைமையின் கீழ் வாலிபர் இயக்கம் பரந்த வெகுஜன ஸ்தாபனமாக இயங்கி வாலிபர்களை அணிதிரட்டி புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்பதில் கட்சியின் பக்கபலமாக நின்று செயலபடும் எனவும் வாலிபர் இயக்கம் முடிவு செய்தது. மேலும் தேசிய ரீதியில் இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான அன்றாடப் போராட்டங்களை முன்னெடுப்பதிலும், அவற்றை தேசத்தின் முழுமையான போராட்டங்களுடன் இணைப்பதிலும் வாலிபர் இயக்கம் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்படும். அதே வேளை சர்வதேச ரீதியில் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கு எதிரான போராட்டத்திலும் குறிப்பாக சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத்தை அம்பலப்படுத்தியும், எதிர்த்தும் பல்வேறு வழிகளில் வாலிபர் இயக்கம் இயக்கங்களை முன்னெடுக்கும்.

வாலிபர் இயக்கம் தனது அரசியல் ஸ்தாபன வேலைகளை மேலும் நாடு முழுவதிலும் விஸ்தரித்து வேலை செய்வதுடன் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தனதுதேசிய மாநாட்டையும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வெகுஜனங்களின் முன்முயற்சி இன்றி புரட்சிகர இயக்கம் முன் செல்ல முடியாது

செம்பதாகை — புரட்சிகர வெகுஜன ஏடு

# புரட்சிகர சக்திகளின் ஐக்கியம்

நமது நாட்டின் புரட்சிகர சக்திகள் பல்வேறு பெயர்களைக் கொண்ட குழுக்களாக ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றின் மத்தியில் ஒரு பலமான ஐக்கியம் தேவைப்படுகின்றது. இத் தேவை நமது நாட்டின் உழைப்பாளி வர்க்கத்தின் அபிலாஷைகளில் இருந்து பிறக்கின்றது. சகல உண்மையான புரட்சிகர சக்திகளினதும் ஐக்கியம் முதலில் ஏற்பட வேண்டும். அப்படியான ஒரு உறுதி மிக்க ஐக்கியம் ஏற்படும் பட்சத்தில் தான் நாட்டின் முற்போக்கு சக்திகள், தேசபக்த சக்திகள், தேசவிடுதலையை விரும்பும் தேசிய முதலாளித்துவ சக்திகள் மேன் மேலும் நம்பிக்கை பெற்று புரட்சிகர சக்திகளின் பக்கமும், உழைப்பாளி வர்க்கத்தின் பக்கமும் சேரக் கூடிய நிலைமைகள் ஏற்படும். அவ்வாறான நிலைமைகளினால் தான் இந் நாட்டின் விடுதலைக்கு புரட்சிகர சக்திகளினால் தலைமை தாங்க முடியும். இவ் விதமான ஒருகடமையை உண்மையான புரட்சிகர சக்திகள் தற்போது எதிர் நோக்கியுள்ளன.

நமது நாட்டின் புரட்சிகர சக்திகள் காலத்திற்குக் காலம் பிளவடைந்து வந்துள்ளன. 1964ம் ஆண்டளவில் திரிபுவாதக் கட்சியில் இருந்து பிளவடைந்த புரட்சிகர சக்தி மிகவும் பிரமாண்டமானது. அது திரிபுவாதத்திற்கும், ரொட்சீசவாதத்திற்கும் எதிரான நிலையில் மிகவும் சக்தி மிக்கதாகவே இருந்தது; ஆனால் அந்தப் புரட்சிர சக்திகளுக்குக் கிடைத்த துரதிஸ்டமான தலைமையினால் ஒரே ஒரு புரட்சிகர சக்தியாக இருந்த நிலைமை பிளவடைந்த பல்வேறு புரட்சிகரக் குழுக்களை நாட்டில் தோற்றுவித்தது. அந்தத் தலைமையின் தத்துவார்த்த— அரசியல்— ஸ்தாபனத் (தத்துவத்தில் நிலையியல், அரசியலில் ஒரு முனை வாதம், ஸ்தாபனத்தில் தனிநபர் அகங்காரம்) தவறுகளால் புரட்சிகர இயக்கம் மந்தகரமாக்கப்பட்டது. தான் தோன்றித் தனமான தலைமையினால் "நான் சொல்வது மட்டும்தான் சரியானது" "நான் தான் முக்காலும் உணர்ந்த மாக்சிச முனிவர்" "என்னை விட உயர்ந்த புரட்சிவாதி இந் நாட்டில் இல்லை, எனிமேலும் தோன்ற முடியாது" போன்ற அசம்பாவம் கொண்ட நிலைமைகளினால் காலத்திற்குக் காலம் புரட்சிகர சக்திகள் பிளவடைந்து போகும் நிலையைத்தான் நமது புரட்சிகர இயக்கம் எதிர் கொள்ள நேரிட்டது. இது கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவம்.

கடந்த பதினைந்து ஆண்டு கால அனுபவத்தில் இருந்து சகல குழுக்களாகவும் உள்ள புரட்சிகர சக்திகள் தம்மைத் தாமே உணரவும், தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கவும் வேண்டிய ஒரு அவசியத்திற்கும் வந்துள்ளன. ஆதலால்தான் எமது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) புரட்சிகர சக்திகளின் ஐக்கியத்தை வலியுறுத்துகின்றது. இவ் ஐக்கியம் கோட்பாடு தழுவியதாக இருக்க வேண்டும். அதே வேளை விட்டுக் கொடுப்புகள் உள்ளதாகவும் அமைய வேண்டும். நவீன திரிபுவாதிகளும், பழைய— புதிய ரொட்சீசவாதிகளும், குட்டி முதலாளித்துவ வீரசாகச வாய்வீச்சுக்காரர்களும் புரட்சிகர சக்திகளாகக் கணிக்கப்பட மாட்டார்கள். இது தேசிய சர்வதேச ரீதியில் இன்று தெளிவாகக் காணக் கூடியதே. தேசியம்-சர்வதேசியம், இதில் ஒன்றை ஒன்று பிரித்து அல்லது இதில் தனியாக ஒன்றை மட்டும் வலியுறுத்தியும் நமது நாட்டின் புரட்சிகர இயக்கம் முன்செல்ல முடியாது.

நவீன திரிபுவாத, ரொட்சீசவாத, குட்டி முதலாளித்துவ அதி தீவிரவாத சக்திகள் படிப்படியாக ஒன்றுபட்டு வருகின்றன. இவை தேசிய ரீதியில் நமது மக்களை தவறான வழியில் இட்டுச் செல்ல முனைகின்றன. அதே வேளை சர்வதேச ரீதியில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவலாளர்களுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு கொடுத்து வருகின்றனர். இந் நிலைமை நமது நாட்டு உண்மையான புரட்சிகர சக்திகளினால் நன்கு உணரப்படல் வேண்டும்.

ஆதலால் மாக்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொண்ட, புதியஜனநாயகப்புரட்சிக்கோட்பாட்டை பற்றிக் கொண்ட, ஏகாதிபத்திய— சமூக ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட, நமது நாட்டின் விடுதலையை உணர்வு பூர்வமாக விரும்புகின்ற சகலபுரட்சிகர சக்திகளினதும் ஐக்கியம் அவசியமாகின்றது;

இவ் ஐக்கியத்திற்கு சகல புரட்சிகர சக்திகளும் சுய நலமற்ற, குறுகிய நோக்க மற்ற, விடுதலை வேண்டி நிற்கும் மக்களின் அடிப்படை அபிலாஷைகளில் இருந்து வேலைகளைச் செய்தல் வேண்டும். ஐக்கியத்திற்கான வழிகளின் ஆரம்பமாக புரட்சிகர சக்திகள் தம்முள் ஒன்றை ஒன்று பகிரங்கமான விமர்சனங்களிலும், தாக்குதல்களிலும் ஈடுபடாது பார்த்துக் கொள்வது அவசியம். கோட்பாடுகளுக்கு அமைய தத் தமது ஸ்தாபனங்களினூடான பேச்சுவார்த்தைகளை மேற் கொள்ளல் வேண்டும்.

விமர்சனத்திற்குரியவைகளையும், தஸ்தாவேசுகளையும் சகோதர இயக்கங்கள் என்னும் அடிப்படையில் தம்முள் பரிமாறிக் கொள்ளவும் முடியும். அவற்றின் மீதுள்ள விமர்சனங்கள் ஆரோக்கியத்திற்கான நட்பு உணர்வுடன் அவ் அவ் ஸ்தாபனங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும். தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பொது எதிரியை இனங்காண்பதிலும், அவற்றுக்கு எதிரான போராட்ட இயக்கங்களிலும் ஐக்கியப்படக் கூடிய சகல அம்சங்களிலும் ஐக்கியப்படல் வேண்டும். ஒரு இயக்கத்தை மற்றொரு இயக்கம் குழி பறிக்க முற்படாத வகையிலும் அல்லது அதை மற்றொன்று மூழ்கடிக்க எத்தனிக்காத வகையிலும் தத் தம் ஸ்தாபன வேலைகளை நாட்டின் சகல பாகங்களிலும் முன்னெடுப்பதில் உள்ள முரண்பாடுகளைத் தம்முள் பேசித் தீர்த்துக் கொள்ளல் வேண்டும்,

இவ் வழிகளில் நம் நாட்டு உண்மையான புரட்சிகர சக்திகள் ஒன்றுபட்டு வேலை செய்வதன் மூலம் புரட்சிகரமான ஐக்கியம் உருவாக முடியும். அவ் ஐக்கியம் நீடித்து நமது நாட்டின் விடுதலைக்கு வழிகாட்டி வெற்றி பெறச் செய்யும் என்றே நாம் திடமாக நம்புகின்றோம்.

மாக்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனை வெல்க!
புரட்சிகர சக்திகளின் ஐக்கியம் வளர்க!!

# ஆயுதப் படைகளின் அட்டகாசம்

நாட்டின் பல பாகங்களிலும் ஆயுதப் படைகளின் அட்டூழியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆயுதப் படைகள் மக்களின் சேவகர்கள் என்று வாயளவில் போதிக்கப்படுகின்றது. ஆனால் ஆயுதப்படையினர் அதைச் செவிமடுத்ததாகச் தெரியவில்லை. மக்களும் அதை நம்பத் தயாரில்லை. எந்த இடத்திலும் சிறு சம்பவங்களாக இருந்தாலும் ஆயுதப் படையினர் கூட்டமாக வந்து மக்களை அடித்துநொருக்குவதையே காண முடிகின்றது. மக்கள் மோசமாகத் தாக்கப்பட்ட பின் அரசும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் வந்து "விசாரணை" "நடவடிக்கை" என்றெல்லாம் கூறி மக்களுக்கு போக்குக் காட்டி விடுகிறார்கள். இவர்களது ஆகக் கூடிய நடவடிக்கை இடமாற்றமே தவிர வேறு எதுவும் இல்லை. இடமாற்றம் வனாந்தரத்திற்கு அல்ல ஏதோ மக்கள் வாழும் வேறொரு பகுதிக்குத்தான் என்பதை மக்கள் புரிந்து கொள்ளாமலும் இல்லை.

ஆயுதப் படைகளின் நடவடிக்கைகள் எதைக் காட்டுகின்றன? ஆளும்வர்க்கத்திற்கு எதிரான அதிருப்தி மக்கள் மத்தியில் நாளாந்தம் வேகமாக வளர்ந்து வருவதையே காட்டுகின்றன மக்களுடைய அதிருப்தியை ஒரு போதும் ஆளும் வர்க்கத்தினால் போக்க முடியாது. அவ் அதிருப்திவளர்ந்து தமக்கு எதிரான பெரும் போராட்டமாகக் கிளம்பி விடுமோ என்ற அச்சத்தில் தான் சிற் சிறு சம்பவங்களைக் கூட ஆயுதப் படைகளைக் கொண்டு நசுக்கும்வேலை நடைபெறுகின்றது. இதற்காகவே ஆயுதப்படைகளுக்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் வழங்கப்படுவதுடன் பெருந்தொகையானோர் ஆயுதப்படைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றனர். ஆளும் வர்க்கம் ஆயுதப் படைகளை விஸ்தரிக்கும் வேகத்திலும் பார்க்க மக்களின் அதிருப்தி கூடுதலாக வளர்ந்து வருகின்றது. என்பதுஉண்மையாகும்,

# தமிழர் கூட்டணியின் தீண்டாமை ஒழிப்பு

சில மாதங்களுக்கு முன் தீண்டாமை ஒழிப்புப் பற்றி தமிழர் கூட்டணித் தலைமைப் பீடம் ஆரவாரம் செய்தது. தமிழர் கூட்டணியின் முக்கிய புள்ளிகளை உள்ளடக்கிய ஒரு குழுவும் உருவாக்கப்பட்டது. ஆரவாரம் ஆரம்பிக்கப்பட்டு ஆறுமாதங்கள் சென்று விட்டன. தமிழர் கூட்டணியும் அதன் தீண்டாமை ஒழிப்புக் குழுவும் எதைச் சாதித்தது? தமிழர் கூட்டணியினரால் தீண்டாமை ஒழிப்பை முன்நின்று நடத்த முடியவில்லை. காரணம் தீண்டாமையை இறுக்கமாக நடைமுறைப்படுத்துபவர்களும் அவர்களாகவே உள்ளனர். தமிழர்உரிமை பற்றியும், தனித் தமிழ்நாடு பற்றியும் உரக்கச் சத்தமிடும் கூட்டணியின் கனவான்கள் தான் கடித்த தீண்டாமையை கடைப்பிடிப்பவர்கள் என்பது உலகறிந்த இரகசியமாகும். இந்தக் கனவான்களின் வீடுகளில் நடைபெறும் திருமண— மரணச் சடங்குகளின் போது நடைமுறைப்படுத்தப்படும் அடிமை குடிமை முறைகள் எவ்வளவு ஒழுங்காகவும் முறையாகவும் நடத்தப்படுகின்றன. என்பதை ஒருவர் அவதானித்தால் இவர்கள் தானா தீண்டாமை ஒழிப்பைப் பற்றிப் பேசுகிறார்கள் என்ற முடிவுக்கு வர முடியும்.

தமிழர்கூட்டணியின் தீண்டாமை ஒழிப்பு "பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையும்" காட்டும் நிலையில் தான் உள்ளது. அண்மையில் உடுப்பிட்டி பகுதியில் சாதி வெறியின் பேரால் ஒடுக்கப்பட்ட மக்கள் பலமான தாக்குதல்களுக்கு உள்ளாகினர். நான்குபேர்கள் வரை பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறு வடபகுதியின் பல இடங்களில் சாதிவெறி - தீண்டாமையின் பெயரால்ஒடுக்கப்பட்டமக்கள் தாக்கப்படுவது மாதா மாதம் தொடரவேசெய்கின்றது. இத் தாக்குதல்களை மக்கள் பலவழிகளிலும் எதிர்க்கவே செய்கின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் தாக்கப்படும் போது வாளாதிருக்கும் கூட்டணிக் கனவான்கள் தாக்குதலுக்குப் பின் மக்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க முற்படும்போது "சமாதானம்" "சமாதானம்" என்று கூறி சாதி வெறியர்களைப் பாதுகாத்து விடுகின்றனர். தற்போது இச் சமாதானத் தொண்டிற்கு ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலேயே ஒருவரை எம். பி. யாக்கியும் வைத்துள்ளனர். கூட்டணித் தலைமை இந்த எம். பி. மூலம் ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றும் வேலையைச் செய்து வருகின்றது. இவ் ஏமாற்று வேலைகள் மக்களுக்குத் தெரியாத விடயங்கள் அல்ல. ஒடுக்கப்பட்ட மக்கள் கடந்த காலப் போராட்டங்கள் காட்டிய சரியான திசை வழியில் மேலும் செல்வதன் மூலமே உண்மையான தீண்டாமை ஒழிப்பை எதிர்பார்க்க முடியும்.

# வேலையில்லாப் பிரச்சினையில் மலையக நிலை

மலையக இளஞ் சந்ததியினரிடையே கல்வியில் அக்கறையின்மை காணப்படுவதாக ஓர் குறை சொல்லப்படுவதுண்டு. இதற்கான மூலகாரணங்களில் முக்கியமானது படித்த வாலிபர்களுக்கு அவர்களின் தராதரத்திற்குரிய வேலை வழங்கப்படாததேயாகும் குடியுரிமைப் பிரச்சினை என்ற காரணம் காட்டி வேலை வழங்குவதில் புறக்கணிக்கப்பட்டதால் கல்வித் தராதரம் பெற்ற வாலிபரும் தோட்டத்து வேலைக்குச் சென்றார்கள். இதைப்பார்த்து விரக்தியடைந்த பெற்றோர் தோட்டத்தில் வேலைக்குப் பெயர்பதியும் வயதுவரை மட்டும் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பி வந்தார்கள்.

இப்போது தொழிற்சாலை, காரியாலய வேலைக்கு தோட்டத்துப் படித்த வாலிபருக்கே முன்னுரிமை வழங்க வேண்டுமெனும் நிலை உண்டு. ஆனால் இன்னும் பல இடங்களில் இது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

கொத்மலை தொகுதியிலுள்ள சீன் தோட்டத்தில் படித்த தோட்ட வாலிபர்களைக் காரியாலய வேலைக்குச் சேர்க்க மறுப்பது ஓர் உதாரணமாகும் நேர்முகப் பரீட்சையில் தகுதியெனக் கண்டும், வேண்டிய சிபார்சுகள் காட்டப்பட்டும் முடிவில் அவர்கள் நிராகரிக்கப்படுவதே நிகழ்ந்திருக்கிறது. நிராகரப்புக்கு ஏற்க முடியாத அற்ப காரணங்கள் காட்டப்பட்டன.

அதே தோட்டத்தில் கூலித்தொழிலாளராக வேலை பார்க்கும் பெற்றோரின் பிள்ளைகள் தமக்கருகில் சமதையாயிருந்து காரியாலய வேலை பார்ப்பதா என்ற 'தமிழ் உணர்வு' மிக்க காரியாலய எழுதுவினைஞர்களின் குறுகிய மனப்போக்கின் வெளிப்பாடும் தொழிலாளரின் பிள்ளைகள் வேலை பெறுவதில் கஷ்டத்தைக் கொடுக்கிறது.

இதற்குப் பதிலாக வேறிடங்களிலிருந்து வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தமிழ்ப் பிள்ளைகளைப் பராமரிக்கும் தாதிமார் வேலை தமிழ் தெரியாத சிங்கள யுவதிகளுக்கு வழங்கப்படும் பரிதாப நிலையும் நிலவுகிறது. சேவையாற்ற வேண்டுமென்று, அன்றேல் சம்பளம் பெற வேலையிருக்க வேண்டுமே என்பதற்காகவா வேலைகள் வழங்கப்படுகின்றன என தோட்டத்து மக்கள் கேட்கின்றார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் பெரும் சங்கம் எனும் முறையில் இ. தொ. கா. வினை நாடியும்— தோட்டத் தொழிலாளரின் பெருந்தலைவர்தானே எனத் தப்பட்டம் அடிக்கும் அமைச்சர் தொண்டமானை நாடியும் செய்து முடிக்கிறோம் என்ற வீரவார்த்தைகள்ளன்று செயலில் எதுவும் காட்டப்படவில்லை.

இதற்கு மாறாக, தகுதியற்றவராக இருந்தாலும் தனக்கு விசுவாசமானவர்கள் என்ற காரணத்தைக் கொண்டு, பெரும் வசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்கு வேலை வழங்கும் பல சம்பவங்களை மலையகத்தில் காண முடிகிறது.

இதனாலெல்லாம் மலையகத் தொழிலாளரின் தலைவர் என்ற நாமத்தின் சொரூபம் மெல்ல மெல்ல வெளிச்சத்தில் வருவதை இப்போது பல இடங்களில் காண முடிகிறது

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டேத் தீருவார். சிவனு லெட்சுமணனின் மறைவால் நீலிக்கண்ணீர் வடித்து அம்பலமானது போல் சதிகளும் சபைக்கு வந்தே தீரும். இருப்பினும் அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கு ஆறு வருடத்துக்கு ஒரு முறை 30 நாள் மோகமும் தொடர்ந்து 6 வருட பதவிக் கால ஆசையும் வந்தே தீரும்.

— பெத்தான்

க்களிடம் வளர்ந்துவரும் அதிருப்தி வர்க்கமுரண்பாட்டின் வெளிப்பாடே

# தமிழ்மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க கிளர்ந்தெழுவது நியாயமானதே!

தமிழ் பேசும் மக்கள் காலத்திற்குக் காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்களினுல் பாகுபடுத்தல்களுக்கும், புறக்கணிப்புகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வந்துள்ளனர். அவர்களின் பிரதேசம், மொழி, கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றில் திட்டமிட்ட இனவாரியான புறக்கணிப்புகளும் பாகுபடுத்தல்களும், அடக்குமுறைகளும் இடம் பெற்று வந்துள்ளன. இதனுல் தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுவது முற்றிலும் நியாயமானதேயாகும்.

ஒரு நாடு ஏகாதிபத்தியத்தினுலும், காலனியாதிக்கத்தாலும் அடக்கப்படும் போது அந் நாடு அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது நியாயமானதாகும். ஒரு நாட்டின் முதலாளித்துவ - பிரபுத்துவ ஆளும் வர்க்கம் அந்நாட்டு மக்களின் மீது நடத்தும் அடக்கு

சதா காலமும் ஒருவரை ஒருவர் பரம விரோதியாக பகைத்துக் கொண்டு வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமது இனங்களைச்சேர்ந்த ஆளும் வர்க்கத்தினரின் உண்மையான கோர உருவங்களை மக்கள் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உதாரணமாக வேலை இல்லாத் திண்டாட்டம் என்பது அடிப்படையில் ஒரு பொருளாதாரப் பிரச்சினை. இது வர்க்கப் பிரச்சினையின் தீர்வில் மட்டும் தான் தங்கியுள்ளது. இன்றைய பொருளாதார— சமூக அமைப்பில் வேலை இல்லாத்திண்டாட்டம் தீர்க்கப்பட முடியாத ஒன்ருகும். ஆளும் வர்க்கத்தினர் இப் பிரச்சினையை தீர்க்க முடியாத நிலையில் இன ரீதியிலான பாகுபடுத்தல்கள், பாரபட்சம், புறக்கணிப்பு என்பனவற்றின் மூலம் உண்மைகளைத் திசை திருப்பி விடுகின்றனர் இதனுல் இரு இனங்களின் மத்தியிலும் மனக் கசப்பும், இனக் குரோதங்களும் இயல்பாகவே

பாட்டை வைத்துக் கொண்டு சாதாரண தமிழ் மக்கள் எதிர் நோக்கும் இன அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை சிறுமைப்படுத்தவோ அல்லது அசட்டை செய்யவோ கூடாது. தமிழ்த் தலைவர்களை விமர்சிக்கும் தொனியில் தமிழ் மக்களையும் சிலர் விமர்சிக்க முற்படுகின்றனர். இத்தகையவர்கள் தமிழ்த் தலைவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் சரியானஎல்லைக்கோட்டை வகுக்க முடியாத பிரகிருதிகள் என்றே கூற வேண்டும். அடுத்ததாக தமிழ் மக்களின் போராட்டங்களை ஆதரிப்பது என்ற சுலோகத்தின் கீழ் தமிழ்த் தலைவர்களின் பிரிவினைக்கோரிக்கையைக் கூட ஆதரிக்க வேண்டும் என்ற மறுமுனைக்குச் செல்லும் போக்காகும். இது மிகவும் ஆபத்தானதாகும். மேற்கூறிய இரண்டு போக்குகளும் மாக்சிச லெனினிச வாதிகள் என்று கூறுபவர்கள் மத்தியில் இருக்கவே செய்கின்றது. இத்தகைய இரண்டு போக்குகளும் இன அடக்கு

வும் நிதானமானதாகவும் தேசத்தை பிளவுபடுத்தாதவாறும் இருக்க வேண்டும். இது அடிப்படைப் பிரச்சினைகளுடன் இணைந்ததான இறுதித் தீர்வை நோக்கி முன் செல்ல வேண்டும். அதன் அர்த்தம் நமது நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் யாவும் தீரும் வரை தமிழ் மக்கள் வாழாதிருக்க வேண்டுமா? இல்லை. தமிழ் மக்கள் தம்மை எதிர் நோக்கும் இன அடக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவது அவசியமாகும். அவ்வாறுன கிளர்ச்சியானது அடக்குமுறைகளுக்கு எதிரானதாகவும், நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதுமாகவே இருக்க வேண்டும். அதை விடுத்துசிங்கள ஆளும் வர்க்கத்திற்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் ஒரு எல்லைக் கோட்டை வரையாது சகல சிங்களமக்களுக்கும் எதிரான ஒரு இயக்கம் என்ற நிலையில் நின்று தமது இயக்கத்தை முன்னெடுக்கக் கூடாது. தமது நியாயமான உரிமை

னும் இணைக்க வேண்டும். அவ்வாறுன பொதுப் போராட்டங்களில் சாதாரண சிங்கள— தமிழ் மக்கள் தத் தமது போராட்டங்களில் ஒருவரை ஒருவர் ஆதரித்து நிற்பதனுல் தான் முழுமையான விடுதலைப் பாதையில் தமிழ் மக்கள் முன் செல்ல முடியும். அப்பொழுது தான் தமிழ் மக்களின் நீதியான போராட்டங்கள் தேசியத் தன்மையைப்பெற்று வலுவான போராட்டங்களாக மாற முடியும். இத்தகைய நிலைமைகளை தமிழ்த் தலைவர்களும் —சிங்களத் தலைவர்களும் திட்டமிட்டே மறுத்து வந்ததால் தமிழ் மக்களின் இயக்கங்கள் ஒரு குறுகிய வட்டத்துக்குள் நிலை கொள்ள வேண்டியதாயிற்று. இந் நிலைமையை தமிழ் மக்கள் மத்தியில் மிக வேகமாக வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் நிச்சயம் மாற்றியமைக்கவேண்டும். அவர்கள் நிச்சயம் பிரபுத்துவ, முதலாளித்துவ, பிற்போக்குத் தமிழ் தலைவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட தவருன கொள்

## இன அடக்குமுறைகளுக்கு எதிராகவும் மாக்சீஸ்ட்டுக்கள் போராட வேண்டும்

முறைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவது நியாயமானதேயாகும். அதே போல் ஒரு நாட்டின் ஆளும் வர்க்கத்தின் பெரு இனவாத அடக்குமுறைகளால் சிறுபான்மை இனங்கள் அடக்கப்படும்போது அவ் அடக்கு முறைகளுக்கு எதிராக சிறுபான்மை இன மக்கள் கிளர்ந்தெழுவது முற்றிலும் நியாயமானதேயாகும். இந் நிலை எங்கு அடக்கு முறை உண்டோ அங்கு எதிர்ப்புகள் கிளம்பும். அவை கிளர்ச்சிகளாகிப் போராட்டங்களாக உருமாறும். இது சமுதாய வளர்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாதது என்பது நியதியாகும். இதை மாக்சிசம் நன்கு தெளிவுபடுத்துகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களை எதிர் நோக்கியுள்ள இன ரீதியிலான அடக்குமுறைகளும் அவற்றுக்கு எதிரான கிளர்ச்சிகளும் இந் நியதிக்கு உட்பட்டதே என்பது ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். இலங்கையில் ஆளும் வர்க்கத்திற்கும், ஆளப்படும்மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் வளர்ச்சி அடைந்தே வந்துள்ளன. இவற்றுள் இன ரீதியிலான முரண்பாடுகளும் அடங்கும். இவை இன ரீதியிலானவையாக இருந்த போதிலும் அடிப்படையில் வர்க்க முரண்பாடுகளுக்கு உட்பட்டதேயாகும். வர்க்க அடிப்படையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத ஆளும் வர்க்கத்தினர் ஒவ்வொரு பிரச்சினையையும் இனவாதப் பிரச்சினையாக்கி அவற்றை தமிழ் இனத்துக்கு எதிரான இன ஒதுக்கல்களாக பாகுபடுத்தல்களாக, புறக்கணிப்புகளாகச் செய்து வந்துள்ளனர். இதனுல் வர்க்க முரண்பாட்டை மறைத்து இன முரண்பாடுதான் யாவற்றுக்கும் அடிப்படையானது என்ற ஒரு ஏமாற்றை மக்கள் முன் நிலை நிறுத்தி வந்துள்ளனர். இதனுல் சிங்கள— தமிழ் மக்களான ஆளப்படும் சாதாரண மக்கள் தம்முள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு

வளர்ந்து விடுகின்றன. இதே போல் மற்றொரு உதாரணம் நிலப் பிரச்சினையாகும். சிங்கள மக்கள் நீண்டகாலம் வாழ்ந்த பகுதிகளில் போதியளவு நிலம் தனியார்கைகளிலும், அரசாங்கத்திடமும் உண்டு அவற்றை நிலமற்ற சிங்கள மக்களுக்கு பகிர்ந்து அளிக்கலாம். ஆனுல் அவற்றைச் செய்ய முடியாத ஆளும் வர்க்கம் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி வருகின்றது. அதே வேளை நிலமற்ற தமிழ் மக்கள் தமது பிரதேசத்தில் நிலம் பெறும் வாய்ப்புகளை இழந்துவிடுகின்றனர். இதனுல் இனக் குரோத நிலைமைகள் சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் உருவாகின்றன இவ்வாறு மொழி, கலாச்சார, வேலை வாய்ப்புத்துறைகளிலும் இன ரீதியிலான புறக்கணிப்புகள் பாகுபடுத்தல்கள் இடம் பெறுகின்றன.

இவ்விதமாக இன ரீதியான புறக்கணிப்புகளும், பாகுபடுத்தல்களும்வளர்ச்சி பெற்று வந்துள்ளன. அதே வேளை இவற்றிக்கு எதிராக தமிழ் மக்கள் தமது எதிர்ப்பையும் அதிருப்தியையும் பலவேறு வழிகளில் வெளிப்படுத்தி வந்துள்ளனர். அவர்களது நியாயமான எதிர்ப்புகளையும், அதிருப்தியையும் ஆளும் வர்க்கத்தினர் தமது அதிகாரத்தினுலும், ஆயுதப் படைகளின நடவடிக்கைகளாலும், அடக்கு முறைகளாலும் அடக்க முற்படுகின்றனர்.

தமிழ் மக்கள் தமது நியாயமான உரிமைகளுக்கு கிளர்ந்தெழுவதை மனசாட்சியுள்ள எவரும் ஆதரிக்க வேண்டும். அதே வேளை தமிழ் மக்களின் எழுச்சியை தமதுவர்க்க நோக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் தமிழ்சொத்துடைய வர்க்கப் பிரதிநிதிகளான தமிழ்த் தலைவர்களைப் பற்றிய கண்ணேட்டத்தில் சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது தமிழ்த் தலைவர்களின தவருன [illegible]ப்

முறைகளின் கீழ் உள்ள தமிழ் மக்களுக்கு உதவி செய்யப் போவதில்லை.

எமது நாட்டின் தேசிய இனப் பிரச்சினையை சரியான வர்க்கக் கண்ணேட்டத்தில் எமது நாட்டின் விஷேச சூழ் நிலைகளுக்குப் பொருந்தும் வகையில் அணுக வேண்டும். அத்தகைய அணுகு முறை மிக

களைக் வென்றெடுப்பதற்கு சாதாரண சிங்கள மக்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க தமிழ் மக்கள் முன் வரல் வேண்டும்.

தமிழ் மக்கள் தமது நியாயமான போராட்டங்களை முன்னெடுக்கும் போது அவற்றை தேசத்தின் ஏனைய பிரச்சினைகளுக்கான போராட்டங்களுட

கைகளை படிப்படியாக நிராகரித்து சரியான ஒரு நிலைப்பாட்டிற்கு வருவார்கள் எனத் தமிழ் மக்களின் பெரும் பகுதியினர் எதிர்பார்க்கின்றனர். அதே வேளை தமிழ் மக்கள் இன அடக்கு முறைகளுக்கு எதிராக நடத்தும் நியாயமான போராட்டங்களுக்கு சகல புரட்சிகர, முற்போக்கு சக்திகளும் ஆதரவு கொடுப்பது தலையாய கடமையாகும்.

## சிவனு லட்சுமணனுக்கு வடித்த நீலிக்கண்ணீர் அம்பலமாகிறது

மலையகத் தமிழருக்கு இல்லாத ஒரு பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்த தனது பிரபல தொழிற்சங்கத்தில் இருந்து வெளிக்கிளம்பி மக்களைசந்தர்ப்பவாதங்களால் ஏமாற்றி மலையக மக்கள்குறைதீர்க்க சென்ற மக்கள் தலைவனின் பரியாதையைப் பாருங்கள். எம்மிடம் ஒட்டுக்கு ஒட்டேந்திய போது பேசிய வார்த்தை என்ன? காட்டிய பாதைஎன்ன? கடைபிடித்த கொள்கை என்ன? என்று அத்தனையும் மறந்து அனுதையாக எம்மை விட்டு விட்டு தோட்டத்தொழிலாளர் வாழ்வில் சுபீட்சம் ஏற்பட்டு விட்டதாக மேடைகளில் முழங்கி வரும் 'மலையகத் தலைவனை'' நாம் இனம் காண முடியாமல் இல்லை. எம்மிடம் ஒட்டு வாங்கும்போது அந்த பிரசாரகாலகட்டமான 30 நாட்களுக்கு எம்மிடம்மோகம் கொண்டு தனது ஆறு வருட பதவிவகிக்கும் ஆசையை அனுபவிக்க முற்பட்டு விட்டாரல்லவா. இனி எம்மை எப்படித் தெரியப் போகிறது. தெரிய வரும் இப்போதல்ல ... மீண்டும் ஆறுவருட ஆசை வரும் போது

எத்தனையோ பொய்களை சொல்லி தேர்தலில் வென்றது மட்டுமன்றி தோழர் சிவனுலெட்சுமணனின்மறைவையும் ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி அவருக்காக வக்காலத்து வாங்குவது போல் நடித்து, தன் எண்ணத்தை நிறைவேற்றி, தற்போது அமைச்சராகி 7 ஸ்ரீ காரில் சுற்றி திரிவதையும், மாட்டைப் பிடித்துக்கொண்டு பத்திரிகைகளுக்கு போஸ் கொடுத்து வருவதும் தெரிந்த நடைமுறை விடயங்களாகும்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, நம் வர்க்கத்தின் விடுதலைக்குப் போராடிய சிவனுலெட்சுமணனின் மறைவை பயன்படுத்தி அளித்த வாக்குறுதியை மறந்து திரிவதை நாம் மறந்து விட முடியாது. மலையகத் தலைவன் என்று தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளும் வேசக்காரர், வெல்லுவதற்கு பிரதானகாரணமாக இருந்தது சிவனுலெட்சுமணனின்மறைவு என்பதை அவரே மறந்து விட்டாலும், மறுக்க முடியாது.

தேர்தலில்வெற்றியடைந்ததும் ''சிவனுலெட்சுமணனின் குடும்பத்தைக் காப்பேன்'' ''அவன்தான் உண்மைத் தமிழன்'' ''அவன்தான் மறத்தமிழன்'' ''வீர சொர்க்கமடைந்தவன்'' என்று காப்புறுதியளித்தவர் கால் தம்படியும் இற்றை வரையும் கொடுத்து உதவவில்லை. அது மட்டுமன்றி நினைவாக கல்லறை எழுப்ப வேண்டுமென்று கூவினுர். ஆனுல் சிவனுலெட்சுமணனின் நினைவு தினத்தை மறந்து விட்டார் போல் தெரிகிறது. இற்றை வரை கல்லறை கட்டப்படாதது மட்டுமன்றி, நினைவு தினத்தன்று பொலிசாரால் கல்லறை தாக்கப்பட்டதை (ஏற்கனவே சாதாரண மக்களால் கட்டப்பட்டிருந்த) அறிந்தாரோ இல்லையோ தெரியாது. சிவனுலெட்சுமணனின் சமாதியின் மேல் நின்று ஒட்டுக் கேட்டு வென்றவர் இன்று சமாதியையே மறந்து விட்டார். தோழருக்கு சிலை எழுப்புவதாகக் கூறியவர் மறந்து விட்டு கோயிலுக்குக் மணி வாங்கிப் போடுகிருர். என்னே ஏமாற்று!

இவ்வாறு பல பொய்களை வாய்க்கு வந்தபடி வடிவாகப் பேசி பதவிக்கு சென்றவர் நமக்கு எதிராக நம்மைக் குழித் தோண்டிப்புதைப்பதற்குமான பூதாகர வேலைகளை செய்கிருர். அவர் எவ்வாறுன வேலைகளை மறைமுகமாக செய்தாலும் என்ருே ஒரு நாள் அம்பலப்

(2-ம் பக்கம் பார்க்க)

## பிற்போக்குவாதிகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது நியாயமானத



## உட்கட்சி ஒற்றுமையில் ஓர் இயங்கியல் அணுகு முறை

### தலைவர் மாவோ 1957 நவம்பர் 18

ஒற்றுமை என்ற பிரச்சனையைப் பொறுத்தவரையில், அணுகு முறையைப் பற்றி நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு தோழரிடமும் அவர் பாதகமான ஒருவராக இல்லாமலிருந்தால், அல்லது நாசவேலைக்காரராக இல்லாமலிருந்தால், அவரோடு ஒன்றுபடுவது என்பது தான் நமது அணுகு முறையாக இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். நிலையியல் அணுகு முறையை அல்ல; ஒரு இயங்கியல அணுகு முறையை நாம் அவர் பால் கடைப் பிடிக்க வேண்டும்.

இயங்கியல் அணுகு முறை என்றால் என்ன? எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்ப்பது, தவறு செய்துவிட்டார் என்ற காரணத்தினால் மட்டும் ஒருவரை முற்றாகப் புறக்கணிக்காமல் எல்லா மனிதர்களும் தவறு செய்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்வது என்பது தான் இதன் பொருள்.

''தவறு செய்யாத தனி ஒரு மனிதர் கூட இவ்வுலகில் இல்லை.'' என்று லெனின் ஒரு முறை கூறினார். ஒவ்வொருவருக்கும் ஆதரவு தேவை. தகுதியுள்ள ஒருவருக்கும் மற்ற மூன்று பேர்களுடைய உதவி தேவை. ஒரு வேலிக்கு மூன்று கால்களின் ஆதரவு தேவை. மிகமிக அழகாக இருக்கும் தாமரை மலர் எழுந்து தன் அழகை எடுத்துக் காட்ட அதன் இலைகளில் பசுமை தேவை. இவைகள் சீனப் பழமொழிகள்.

மற்றொரு சீனப் பழமொழி கூறுவது என்னவெனில் மூன்று செருப்புத்தைப்பவர்கள், அவர்களின் அறிவை ஒன்றிணைத்த போது பேராற்றல் மிக்க பெருந்திறமைசாலியான 'சுக்கேலி' யானுக்குச் சமமாகி விடுகிறார்கள், 'சுக்கேலியான்' ஒரு போதும் முழுமையானவராகிவிட முடியாது. அவருக்கு அவருக்கே உரிய எல்லைகள் உண்டு.

நம்முடைய பன்னிரண்டு நாடுகளின் இந்தப் பிரகடனத்தைப் பாருங்கள். நாம் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது என்று ஒவ்வொரு நகலாகப்பரிசீலித்தோம். இன்னும் அதை மெருகு கூட்டிப் பூர்த்தி செய்யவில்லை. கடவுளைப் போன்று எங்கும் நிறைந்தவனாகவும் எல்லாம் வல்லவனாகவும் இருக்கிறேன் என்று யார் ஒருவர் தன்னைப் பற்றிக் கூறிக்கொண்டாலும் அது வெறும் இறுமாப்பென்றே நான் நினைக்கிறேன்.

எனவே தவறு செய்த ஒரு தோழரின் பால் எத்தகைய அணுகு முறையை நாம் மேற்கொள்ள வேண்டும்? நாம் ஒரு நிலை இயல் அணுகுமுறையைக் கடைப்பிடிக்காமல் ஒரு இயங்கியல அணுகு முறையைக் கடைபிடித்து ஆராய்ந்து அறிபவர்களாக இருக்க வேண்டும்.

எங்களுடைய கட்சி ஒரு முறை நிலை இயல், வறட்டுத் தத்துவவாதத்தில் புதைந்தது. அதற்குப் பிடிக்காதவர்களை யாராக இருந்தாலும் அவர்களை முழுமையாக ஒழித்துக் கட்டியது. பிறகு நாங்கள் வறட்டுத்தத்துவவாதத்தைத் துடைத்தெறிந்தோம் இயங்கியலை மேலும் சிறிது கற்றுக் கொள்ளத் தொடங்கினோம்.

எதிர் மறைகளின் ஒற்றுமை என்பது இயங்கியலின் அடிப்படைக் கோட்பாடு. இந்தக் கோட்பாட்டின்படி தவறுகள் செய்த ஒரு தோழரை நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் முதலில் அவரிடமுள்ள தவறுகளை அவரிடமிருந்து களைந்தெறிய ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும். இரண்டாவதாக அவருக்கு உதவியும் செய்ய வேண்டும். முதல் நிலை போராட்டம்; இரண்டாவது நிலை உதவி. அவருடைய தவறுகளைத் திருத்துவதற்கு அவருக்கு உதவி செய்வது, இதனால் அவருக்கு ஒரு வழி கிடைக்கும் என்ற நல்லெண்ணத்திலிருந்து நாம் தொடங்க வேண்டும்.

இருப்பினும் வேறு வகையான நபர்களைச் சந்திக்கும் முறை வேறானது. ரஷ்யாவைச் சேர்ந்த ரொட்ஸ்கி, சீனாவைச் சேர்ந்த சென்தூ-சி. செங் கோ-தா, கோ-காங் போன்ற நபர்களிடம் உதவி செய்யும் அணுகும் முறையைக் கடைபிடிக்க முடியாது.

ஏனெனில் அவர்கள் திருத்தப்பட முடியாதவர்கள். இத்தோடு ஹிட்லர், சியாங் கே-ஷேக், ஜார் போன்ற தனி நபர்களும் இருக்கிறார்கள். அவர்களும் அதே போன்று திருத்தப்பட முடியாதவர்கள். அவர்களைத் தூக்கியெறிய வேண்டும் ஏனென்றால் அவர்களும் நாமும் ஒருவருக்கொருவர் முற்றாக வெவ்வேறானவர்கள். இந்த அர்த்தத்தில் அவர்களுடைய இயல்பில் ஒரு அம்சம் மட்டும்தான் இருக்கிறது, இரண்டு அம்சங்கள் இல்லை.

இறுதியாக ஆராய்ந்தால் ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் பொறுத்த வரையில் கூட இது தான் உண்மை இவைகள் இறுதியில் சோசலிச அமைப்பால் மாற்றியமைக்கப்படுவது நிச்சயம். இதே வரையறை தத்துவத்திற்கும் பொருந்தும். கருத்து முதல் வாதத்தை நீக்கி பொருள் முதல் வாதம் நிலைபெறுவதும், ஆத்தீகத்தை நீக்கி நாத்திகம் நிலை பெறுவதும் நடந்தே தீரும். இங்கு நாம் யுத்த தந்திர ரீதியான, முழுமையான கண்ணோட்டத்திலான குறிக்கோளைப் பற்றித்தான் பேசுகிறோம். ஆனால் செயல் தந்திர ரீதியான (பகுதி நிலையிலான) கட்டங்களின் பிரச்சனை வேறுபட்டது. இந்தக் கட்டங்களில் சமரசங்கள் செய்து கொள்ளலாம்.

கொரியாவில் 38 வது அட்சரேகையின் மீது அமெரிக்கர்களுடன் நாம் சமரசம் செய்து கொள்ளவில்லையா? வியட்நாமில் பிரான்சுடன் சமரசம் நிகழவில்லையா?

ஒவ்வொரு செயல் தந்திரக் கட்டத்திலும் சமரசங்கள் செய்து கொள்வதிலும் போராட்டங்கள் நடத்துவதிலும் சிறந்தவர்களாக விளங்குவது அவசியம்.

நாம் இப்பொழுது தோழர்களுக்கிடையிலான உறவுகளைப் பார்ப்போம். தங்களுக்கிடையில் தப்பபிப்ராயங்கள் உள்ள இடங்களில் தோழர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று நான் ஆலோசனை கூறுவேன். ஒருக்கால் கம்யூனிஸ்ட் கட்சியில் வந்துவிட்டாலே அவர்கள் எல்லாம் வேறுபாடுகளும், தப்பபிப்ராயங்களும் இல்லாத முனிவர்களாகி விடுகிறார்கள்: கட்சி என்பது ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒன்றல்ல; அதாவது, அது ஒரேயானதாகவும் சீரானதாகவும் இருக்கிறது, எனவே பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவையில்லை என்றெல்லாம் சிலர் நினைப்பதாக தெரிகிறது.

கட்சிக்குள் உள்ளவர்கள் 100 சதவிகிதம் மார்க்சியவாதிகளாக இருக்க வேண்டும் போல் நினைக்கிறார்கள். உண்மையில் எல்லா அளவுகளிலுமான மார்க்சியவாதிகளும் இருக்கிறார்கள். 100 சதவிகிதம், 90, 80, 70, 60 அல்லது 50 சதவிகித மார்க்சியவாதிகளாக இருப்பவர்களும் இருக்கிறார்கள். சிலர் 10 அல்லது 20 சதவிகிதம் மட்டுமே மார்க்சியவாதிகளாக இருக்கிறார்கள்.

நாம் இரண்டு பேர்களோ அல்லது அதற்குமேற்பட்டோ ஒரு சிறிய அறையில் ஒன்று சேர்ந்து பேச முடியாதா? ஒற்றுமைக்கான விருப்பத்திலிருந்து துவங்கி ஒருவருக்கொருவர் உதவி செய்வது என்ற உணர்வோடு நாம் பேச்சுவார்த்தை நடத்த முடியாதா?

கம்யூனிஸ்ட் அணிகளுக்குள்ளான பேச்சுவார்த்தையைத் தான் நான் குறிப்பிடுகிறேன். ஏகாதிபத்தியங்களோடு உள்ள பேச்சுவார்த்தையை அல்ல. (அவர்களோடும் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று இருப்பினும் கூட) நான் ஒரு உதாரணத்தைத் தருகிறேன். நமது பன்னிரண்டு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் சற்போது பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கவில்லையா?

60க்கு மேற்பட்ட கட்சிகளும் கூட பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறினால் மார்க்சீய — லெனினீய கோட்பாடுகளுக்குச் சேதம் ஏற்படாமல் இருந்தால், மற்றவர்களிடமிருந்து நாம் ஏற்றுக கொள்ளத்தக்க சில கருத்துக்களை ஏற்றுக் கொண்டு கைவிடத்தக்க நமது சொந்தக் கருத்துக்கள் சிலவற்றைக் கைவிடுகிறோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

# சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மை

''சோவியத் யூனியன் பெரும் பேரரசையைக் கொண்டுள்ளது. அது முழு ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தனது கைகளை வைக்க விரும்புகின்றது. ஐக்கிய அமெரிக்கா உலகில் தனது நலன்களைப் பாதுகாக்க விரும்புகின்றது. அதே வேளை சோவியத் யூனியன் தனது நலன்களை விரிவாக்க முயலுகின்றது. இந்நிலைமை எந்த வகையிலும் மாற்றம் அடையப்போவதில்லை''

தலைவர் மாஓவின் மேற்படி கூற்று ஒரு மேலெழுந்தவாரியான கூற்று அல்ல அது ஆராய்வது முட்டாள்தனம் என்றும் வாதிட்டவர்கள், இன்றும் வாதிடுபவர்கள் இருகத்தான் செய்கிறார்கள். இத்தகைய கனவான்களின கண்களை கம்போச்சிய சம்பவங்களாவது திறக்கச் செய்யவில்லையா என்று சிலர்கேட்கலாம். நிச்சயம் கம்போச்சியச் சம்பவங்கள் கூட இவர்களின் கண்களைத் திறக்காது என்று நாம் திடமாகக் கூற முடியும். ஏனெனில் இத்தகைய நபர்கள் வாயளவில் இயங்கியலைப் பற்றியும், முதாலாளித்தத்துவத்தின் சமனற்ற வளர்ச்சிப் போக்குப் பற்றியும் உச்சாடனம் செய்தவர்களே அன்றி நடை முறையில் அக்கண்ணோட்டத்துடன் ஆராய்பவர்கள் அல்லர். அதனாலேயே சோவியத்சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மையைப் பற்றி அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

## அன்று செக்கோஸ்லவேக்கியா இன்று கம்பூச்சியா

சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பொளாதார, அரசியல், ராணுவ அம்சங்களை மாக்சிச—லெனினிச இயங்கியல் முறையில் ஆராய்ந்ததன் விளைவாகும். அதனால் தான் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மையைப் பற்றி தலைவர் மாஓ தீர்க்க தரிசனத்துடன் கூறியிருந்தார். இரண்டு மேலாதிக்க வல்லரசுகளைப்பற்றியும் அதில் குறிப்பாக சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மை பற்றியும் மூன்றுலகக் கோட்பாட்டின் மூலம் தலைவர் மாஓ முன்வைத்த மாக்சிச லெனினிசக் கருத்துக்களை சில வரட்டுத் தத்துவ வாதிகள் எள்ளிநகையாடினர். இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் சமமானவை என்றும்இதில் கூடிய ஆபத்து உள்ளது எது என்று இத்தகைய நபர்கள் உண்மையில் சோவியத் சமூக ஏகாதிபத்திற்கு வாயளவில் மட்டும் எதிரானவர்களாகக் காட்டிக் கொண்டு நடை முறையில் அதற்கு ஆதரவான நடவடிக்கைகளையே செய்து வருகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிப்போக்கு எந்தப் பாதையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. நிச்சயமாக ஏகாதிபத்திய வளர்ச்சிப் பாதையில் தான் என்பது யாராலும் மறுக்க முடியாது 1968ம் ஆண்டில் செக்கோஸ்லவேக்கியாவில் அப்பட்டமான ஆக்கிரமிப்பில் சோவியத் யூனியன் இறங்கியது. அன்றிலிருந்து சோவியத்யூனியனை சமூக ஏகாதிபத்தியம் என்றே உலக மக்கள் அழைக்க ஆரம்பித்தனர். இவ்வாறு சோவியத்யூனியனை சமூக ஏகாதிபத்தியமாக இனங் கண்டு கொள்வதில் தலைவர் மாஓவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் உலக மாக்சிஸ்ட்-லெனினிஸ்டுகளுடன் சேர்ந்து முன்னணிப் பாத்திரத்தை வகித்தனர். தலைவர் மாஓவின் மறைவுக்குப் பின்பும் அதே சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தின் முன்னணியில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீன மக்களும் உலக மாக்சிஸ்ட்-லெனினிஸ்டுகளுடனும், மக்களுடனும் உறுதியாக நிற்கின்றனர்.

1968ம் ஆண்டில் செக்கோஸ்லவேக்கியாவில் சோவியத் யூனியன் நேரடி ஆக்கிரமிப்பில் இறங்கியது. அதன் பின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தனது பொருளாதார, ராணுவப் பிடிகளை இறுக்கிக் கொண்டது. கிழக்கு ஐரோப்பாவில் ''வார்சோ ஒப்பந்த நாடுகள்'' என்ற ராணுவக் கூட்டணி மூலமும் ''கொமிகோன்'' என்ற பொருளாதார அமைப்பின் மூலமும்சோவியத் யூனியன் தனது பிடியை இறுக்கித் தன்னை ஸ்திரப்படுத்தும் பாதையில் முன்னேறியது. 1975ல் ஆபிரிக்காவில் புகுந்து கொள்வதற்கு அங்கோலாவில் தலையிட்டது. அங்கோலாவில் தான் நிலை கொள்வதற்கு ஒரு கைக் கருவியாக கியுபாவையும் பாவித்தது. கியுபாவின் சீரழிந்து கொண்டு போகும் பொருளாதார நிலையைப் பயன் படுத்தி ஆபிரிக்க நாடுகளில் கியுபா படைகளை சோவியத் யூனியன் கூலிப்படைகளாகப் பாவிப்பதில் வெற்றி கண்டது. அங்கோலாவில் இருந்து அதன் அயல் நாடான சையரில் ஆக்கிரமிப்பு நடத்தியது எத்தியோப்பியாவில் பெருமளவு சோவிய — கியுபா படைகள் இறக்கப்பட்டன. எகிப்திய விடுதலை இயக்கத்தை முறியடிக்கவும், சோமாலியாவிற்கு எதிரான ஆக்கிரமிப்புக்கும் சோவியத்— கியுபா படைகள் பயன்படுத்தப்பட்டன. இன்று முழு ஆபிரிக்கக் கண்டத்திலும் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட கியுபக் கூலிப்படைகள் நிலை கொண்டுள்ளன. இவர்களை வழி நடத்துவதற்கு பல்லாயிரக்கணக்கான சோவியத் ராணுவமும், ராணுவ ஆலோசகர்களும், யுத்த தளபாடங்களும் குவிக்கப்பட்டுள்ளன. தமக்கு எதிராகஉள்ள அரசாங்கங்களை அல்லது நடுநிலையாக உள்ளஅரசாங்கங்களை ராணுவ சதிகளின் மூலம் கவிழ்க்க முற்பட்டன. இதில் சில வெற்றியும் பெற்றுள்ளன.

கிழக்கு ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளதாக நினைக்கும் சோவியத்யூனியன் தற்போது ஆசியாவில் கை வரிசையைக் காட்ட முற்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் கியுபாவைப் பாவிப்பது போல் ஆசியாவிற்கு வியட்நாமைப் பாவிக்க முன் வந்து கம்பூச்சியாவை ஆக்கிரமிப்பதில் தற்காலிக முன்னேற்றம் கண்டுள்ளது. ஏற்கனவே சோவியத் சமூக ஏகாதிபத்தியம் இந்திய, பங்களாதேஷ் போன்றவற்றில் நிலைபெற முயன்றது. அதுவெற்றிபெறாமல் போகவே ஆப்கானிஸ்தானில் சதிப்புரட்சியை நடத்தியது. இன்று கம்போச்சியாவில் போலி முன்னணி மூலம் ஆக்கிரமிப்பை

(5-ம் பக்கம் பார்க்க)

# சோவியத்-வியட்னும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு கம்போச்சிய மக்கள் அடிபணியமாட்டார்கள்!

தென் கிழக்காசியாவில் காலத்துக்குக் காலம் மிகவும் சக்தி மிக்க முடியாட்சிகள் தோன்றின. ஆரம்ப காலத்தில் தோன்றிய, அவ்வாறான ஆட்சிகளுள் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததுதான் பூனன் என்னும் இந்த சமயத்து முடியாட்சி. இது வியட்னாமின் தென் பகுதியில் கி. பி. முதலாம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் செல்வாக்கு படிப்படியாக மீகொங் நதிப் படுக்கை, கம்போச்சியா, மலேசியா வரை பரவியது. இந்தப் பிராந்தியத்தில் சுமார் ஐந்நூறு ஆண்டுகள் இந்த முடியாட்சி சர்வ வல்லமை படைத்து விளங்கியது.

பூனன் காலப் போக்கில் வீழ்ச்சியடையவே அதன் கலாச்சார வாரிசாக சென்லா எனப்படும் கெமர் முடியாட்சி உருவெடுத்தது. கம்பூச்சியாவில் ஒரு பகுதியை உள்ளடக்கியிருந்த இந்த ஆட்சி ஏழாம் நூற்றாண்டளவில் பூனனை கைப்பற்றியது. கெமர் ஆட்சியாளனுல் முதலாவது ஜசனு வர்மன் இந்தக் கைப்பற்றும் வேலையை இறுதியாகச் செய்து முடித்த பெருமைக்குள்ளானுன். ஒன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் அவனது பின்னமர்ந்தவனுன் இரண்டாவது ஜயவர்மனின் காலப்பகுதியுடனேயே கெமர் சரித்திரத்தின் அங்கர் காலகட்டம் தோன்றியது.

புகழ்மிக்க அங்கர் நகரைத் தலை நகராகக் கொண்டு இரண்டாவது சூரியவர்மனும் அவனது வழித்தோன்றல்களும் 12ம் நூற்றாண்டில் கெமர்கள் புகழ் உச்சியை அடைந்தனர். இந்தக் காலகட்டத்தில் நாகரிகம் சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்க... அவர்கள் கட்டிய அங்கர் நகரம் சந்தேகத்திற்கிடமில்லாமல் உலகத்திலேயே மிகச் சிறந்த நுட்பமும், அழகும் நிறைந்ததாகும்.

15ம் நூற்றாண்டில் தாய்லாந்தின் படையெடுப்பால் அங்கர் நகரின் செல்வம் சூறையாடப்பட்டதுடன் கெமர் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. எவ்வாறுபினும் கெமர்கள் குறுகிய காலத்தில் தாய்லாந்துக்காரரை விரட்டியடித்தனர். பாதுகாப்புக்காரணமாக அங்கர் தலை நகரம் கைவிடப்பட்டு 1434ம் ஆண்டு நொம்பென் தலை நகரமாக்கப்பட்டது.

அங்கரின் வீழ்ச்சியுடன் கெமர் நாகரீகமும்மறைந்தது. அங்கர் காடுகளால் சூழப்பட்டது. இந்த நூற்றாண்டிலேயே இது தொல் பொருள் ஆராய்சியாளரால் திறக்கப்பட்டு அதன் நுட்பமும் அழகும் உலகிற்குக் காட்டப்பட்டது.

பிரெஞ்சுக்காரர் வரும் வரை கம்பூச்சியா வேறு ஊடுருவலை எதிர் நோக்கவில்லை. பிரெஞ்சுக்காரர் இந்தோ-சீன விவகாரங்களில் 18ம் நூற்றாண்டிலேயே தலையிட ஆரம்பித்திருந்தாலும் 19ம் நூற்றாண்டின் மத்தியிலேயே அவர்களது ஆதிக்கம் இப் பிராந்தியத்தில் ஏற்பட்டது. ஒரு மத குருவின் கொலையைச் சாட்டாக வைத்துக் கொண்டு 1859ல் பிரெஞ்சுக்கார... னிப உதவியுடன் சை... க் கைப்பற்றி இந்தோ சீ... ல் தமது குடியேற்ற ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். 1863ல் கம்பூச்சியாவின அரசன் நொறடோம் சிகோவாக அண்டை நாட்டாரின் நெருக்குதல் காரணமாக தனது நாட்டைப் பிரெஞ்சுக்காரரின் "பாதுகாப்பில்" ஒப்படைத்தான்.

1940ல் யப்பான் இந்தோ—சீனத்தில் தரையிறங்கியதும் பிரெஞ்சு ஆட்சிக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. யுத்தத்தில் யப்பான் தோல்வியடையப் போவது நிச்சயம் என அறிந்தும் இந்தோ-சீனத்தின் குடியேற்ற ஆட்சி முடிவுக்கு வந்துள்ளதாக அது பிரகடனம் செய்தது. 1945 மார்ச் மாதம் கம்பூச்சியாவின் ஆட்சியாளனும் அவ்வாறுன பிரகடனத்தைச் செய்தான் யுத்தத்தின் போது கம்யூச்சியாவில் கெமர் இசாராக் இயக்கம் ஒன்று உருவாகியது. இந்தத்தேசிய இயக்கத்திற்கு யப்பானியரினதும், ஜிய உறவைத் துண்டித்துக் கொண்டார்

1970ல் இளவரசர் சிகானுக் நாட்டிற்கு வெளியே இருந்த சமயம் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டு அமெரிக்காவின் பொம்மையாட்சியான லொன்-நொல் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்ற சமயம் மாஸ்கோவில் இருந்த இளவரசர் தனது நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு சோவியத் உதவியைக் கோரியிருந்தார். ஆனுல் சோவியத் தலைவர்கள் அதை நிராகரித்து விட்டனர். அங்கிருந்து பீக்கிங் சென்ற சிஹானூக் விமான நிலையத்தில் சீனப் பிரதமர் சௌஎன்லாயால் வரவேற்கப்பட்டதுடன் தலைவர் மாவோவின் பிரத்தியேக அக்கறையையும், ஆதரவையும் கம்பூச்சியாவிற்கு வழங்குவதாகவும் அறிவித்தார.

1970ல் இருந்து இளவரசர் சிஹானுக் தலைமையில் பீக்கிங்கில் கம்போச்சிய அரசாங்கம்

இதே காலகட்டத்தில் தான் வியட்நாம், லாவோஸ் ஆகிய நாடுகளும் மக்களுடைய தொடர்ச்சியானபோராட்டங்களினுல் விடுதலை பெற்றன. ஆனுல் விடுதலை பெற்ற கையோடு வியட்நாம் ஆளும் கூட்டத்தை சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகள் தமது கைக்குள் போட்டுக் கொண்டனர். அவர்கள் வியட்நாம் மூலம் "இந்தோசீன சமஷ்டி" என்ற ஒரு அமைப்புக்கான கோரிக்கையை கம்போச்சியாவிற்கு வைத்தனர். இந்தச் "சமஷ்டி" பற்றியும் இதற்குப் பின்னுல் இருக்கும் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் பற்றியும் ஒரு தெளிவான நிலைப்பாட்டை கம்போச்சிய அரசும், கட்சியும், மக்களும் எடுத்தனர். அதனுல் வியட்நாமின் "இந்தோசீன சமஷ்டி" கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

தனது உலக மேலாதிக்கத்திற்கு கம்போச்சிய மக்கள் எதிரானவர்கள் என்பதைக் கண்ட சோவியத் யூனியன் வியட்நாமைத் தூண்டி கம்போச்சிய எல்லையில் திட்டமிட்ட மோதல்களை உருவாக்கி படிப்படியாக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் மேற் கொண்டது. கம்போச்சியா சோவியத் —வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே "கம்போச்சிய மீட்சிக்கான தேசிய ஐக்கிய முன்னணி" என்ற ஒரு முன்னணி பற்றி மாஸ்கோவில் இருந்தும், ஹ்ஹானேயில் இருந்தும் பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. ஒரு மாதத்தில் ஒரு முன்னணி உருவாகி அது ஒரு நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு வளர்ச்சி பெற்றது என்ற கட்டுக்கதைகளை இது வரை உலகம் நம்பியது கிடையாது. அப்படியாயின் "கம்போச்சியாவின் முன்னணியைப்" பற்றி யார் நம்பப் போகிறுர்கள்.

இன்று சோவியத்- வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்களின் கைப்பொம்மை ஆட்சி நொம்பென்னில் இருப்பது உண்மை தான். ஆனுல் கம்போச்சியா

## மக்கள் யுத்தப்பாதையில் கம்பூச்சிய மக்களும்-
## புரட்சிகர ராணுவமும் முன்னேறுகின்றனர்

ஆதரவு இருந்ததுடன் வியட்நாமின் ஹோ சீமின் அவர்களின் வியட்மின் இயக்கத்துடனும் தொடர்பு இருந்தது. 1945ல் பிரெஞ்சுக்காரர் மீண்டும் வந்ததும் இந்த இயக்கம் தலை மறைவானது.

1949 நவம்பரில் கம்பூச்சியா பிரான்சு யூனியனுடன் சுதந்திரமான இணைப்பாட்சியாக்கப்பட்டது. 1953ல் இராணுவம் பொலீஸ் தலைமையும் கம்பூச்சிய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. 1954 ஜெனிவா உடன்படிக்கையின் கம்பூச்சியாவின் நடுநிலைமையும் சுதந்திரமும் உத்தரவாதம் செய்யப்பட்டிருந்தது தந்தையின் மறைவிற்குப் பின் முடிசூட மறுத்த இளவரசர் சிகானுக்கு அயல் நாடுகளில் இடம் பெற்றுக் கொண்டிருந்த யுத்தங்கள் காரணமாக தனது நாடு உண்மையான நடு நிலைமையையோ, சுதந்திரத்தையோ நிலை நாட்ட முடியாது என்பதை உணர்ந்திருந்தார். தனது நாட்டின் உள் விவகாரங்களில் அமெரிக்கத் தலையீட்டை அவ்வப்போது கண்டித்து வந்த இளவரசர் 1963ல் அமெரிக்க உளவு ஸ்தாபனம் தனது ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி செய்ததைத் தொடர்ந்து அமெரிக்காவுடனுன இரா

பிரகடனப்படுத்தப்பட்டு இயங்கி வந்தது. நாட்டுக்கு வெளியே இயங்கி வந்த கம்போடிய அரசாங்கத்தை உலகின் பல நாடுகள் அங்கீகரித்தன. அவ்வேளையிலும் கூட சிகானுக் தலைமையிலான அரசாங்கத்தை சோவியத் யூனியன் அங்கீகரிக்கவில்லை. சோவியத் யூனியன் அமெரிக்க கைபொம்மையான நொன்-நொல் கும்பலையே அங்கீகரித்து வந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும். கம்போடியாவிற்கு வெளியே அரசாங்கம் இயங்கிய அதே வேளை கம்போடியாவிற்குள் கம்போடியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில்நாட்டை விடுவிக்கும் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஏற்கனவே கிராமப் புறங்களில் செல்வாக்கைப் பெற்றிருந்த கம்யூனிஸ்ட் கட்சி, கிராமப் புறங்களில் தளப் பிரதேசங்களை உருவாக்கி நீண்டகால மக்கள் யுத்தப் பாதையில் நாட்டை விடுவிக்கும்விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தது. தோழர் பொல் பொட் அவர்களைச் செயலாளராகக் கொண்ட கம்போடியக் கம்யூனிஸ்ட் கட்சி சரியான கொள்கைத் திட்டங்களையும், சரியான தந்திரோபாயங்களையும் கையாண்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தனர் இதில் முக்கியமானது ஐக்கிய முன்னணியாகும். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சகலதேசபக்த ஜனநாயக, முற்போக்கு சக்திகளையும் இவ் ஐக்கிய முன்னணியின் கீழ் ஐக்கியப் படுத்தி போராட்டம் முன் எடுக்கப்பட்டது.

கம்போச்சிய மக்களும், புரட்சிகர ஆயுதப்படைகளும் 1975ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தமது தேசத்தை விடுதலைசெய்தனர். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கம்போச்சிய அரசாங்கம் நிறுவப்பட்டது. சோசலிச நிர்மானமும், சோசலிசப்புரட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

## சீனக்கம்யூனிஸ்ட் கட்சியும் - சீன மக்களும் கம்பூச்சிய மக்களின் பக்கத்தில் உள்ளனர்

4 ம் பக்கத் தொடர்ச்சி

நியாயப்படுத்த சோவியத் சமூக ஏகாதிபத்தியம் முயலுகின்றது.

மேற் கூறிய சம்பவங்கள் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் உலகின் மேலாதிக்கத்திற்கான பயங்கரத் திட்டத்தின் ஒரு சில பகுதிகளேயாகும். இவ்வாறுன ஒரு வளர்ந்து வரும் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத்தன்மையைப் பற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும். சீன மக்களும் முன்னெச்சரிக்கையாக உலக மக்களுடனும், நாடுகளுடனும், உலக மாக்சிஸ்— லெனினிஸ்டுகளுடனும் இணைந்து செயல்படுவது முற்றிலும் சரியானதேயாகும். எனவே இலங்கை மக்களாகிய நாமும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்ட இயக்கத்தில் உலக மக்களுடன் இணைந்து முன் செல்வது அவசியமாகும்.

வின் பரந்த கிராமப் புறங்களிலும் நகரங்களிலும் கம்போச்சிய கம்யூனிஸ்ட்கட்சியின் தலைமையில் புரட்சிகர ஆயுதப் படைகளும், மக்களும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக வீரப் போராட்டம் நடத்தி வருகின்றனர். பெரும் தேசபக்தனுன இளவரசர் நரோடம் சிஹானூக் போன்றவர்கள் நாட்டுக்கு வெளியிலும் பொல் பொட், கியுசாம்பன், போன்றவர்கள் நாட்டுக்கு உள்ளும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான பல முனைத்தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கி வருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அவர்களது கைப்பொம்மையான நொன்-நொல் கும்பலுக்கும் கிடைத்த அதே கதி இன்று சோவியத் -வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது கைப்பொம்மையான கெங் சமறினுக்கும் கிடைக்கும் என்பது உறுதியானதாகும்.

## உட்கட்சி .....

4 ம் பக்கத் தொடர்ச்சி

எனவே தவறுகள் செய்த ஒரு தோழரைக் கையாள்வதற்கு நமக்கு இரண்டு கரங்கள் இருக்கின்றன, ஒரு கரம் அவரோடு போராடுவதற்கு; மற்றொரு கரம் அவரோடு ஒன்றுபடுவதற்கு. போராட்டத்தின் நோக்கம் மார்க்சியக் கோட்பாடுகளை நிலை நிறுத்துவது, இதன் பொருள் கோட்பாடு தழுவியதாக இருப்பது; இது ஒரு கரம். மற்றொரு கரம் அவருடன் ஒன்றுபடுவதற்கானது ஒற்றுமையின் நோக்கம். அவருக்கு ஒரு வழியைத்தருவது; அவரோடு சமரசம் செய்துகொள்வது இதன் பொருள் நெளிவு சுளிவானவராக இருப்பது கோட்பாட்டோடு நெளிவு சுளிவை ஒன்றிணைப்பது என்பது ஒரு மார்க்சியக் கோட்பாடு; இது எதிர் மறைவின் ஒற்றுமையாகும்.

எந்தகைய உலகத்திலும் குறிப்பாக வர்க்க சமுதாயத்தில் முரண்பாடுகள் மிகுந்திருக்கின்றன. சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று சிலர் சொல்கிறுர்கள். ஆனுல் இது பிரச்சனையைத் தவறுன வழியில் முன் வைப்பதாகும் என்று நான் கருதுகிறேன். முரண்பாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதல்ல பிரச்சனை. அந்த முரண்பாடுகள் மிகுந்திருக்கின்றன என்பதுதான் பிரச்சனை. முரண்பாடுகள் இல்லாத இடமே இல்லை; ஆராய்ந்து அறியப்பட முடியாத எந்த பொருளுமே இல்லை, அவரை ஆராய்ந்து அறிய முடியாது என நினைப்பது நிலையியல் பார்வையைக் கொண்டது. பாருங்கள்! ஒரு அணு என்பது சிக்கலான எதிர்மறைகளின் ஒற்றுமைகளைக்கொண்டது. இதில் இரண்டு எதிர்மறைகளின் ஒற்றுமை இருக்கின்றன.

அவை மூலக்கருவும் எலெக்ட்ரான்களும் ஆகும். ஒரு மூலக்கருவில் மேலும் ஒரு எதிர்மறைகளின் ஒற்றுமை இருக்கின்றது அது புரோட்டான்களும் நியூட்ரான்களும் ஆகும். புரோட்டானைப்பற்றிக் கூறினுல் புரோட்டான்களும் எதிர் புரோட்டான்களும் இருக்கின்றன. நியூட்டான்களும் எதிர் நியூட்டான்களும் உள்ளன. சுருங்கக் கூறினுல் எதிர்மறைகளின் ஒற்றுமைகளின் ஒற்றுமை எங்கும் நிலவுகிறது. எதிர்மறைகளின் ஒற்றுமையைப் பற்றிய கோட்பாட்டை அதாவது இயங்கியலை, பரவலாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும். இயங்கியல். தத்துவஞானிகளின் குறுகிய வட்டத்திலிருந்து வெளியே பரந்துபட்ட மக்களிடம் செல்ல வேண்டுமென்று நான் கூறுவேன். கம்யூனிஸ்ட் கட்சிகளின் அரசியல் குழுக்களிலும் மையக் குழுக்களின் கட்சிக் கமிட்டிகளின் எல்லா மட்டங்களிலும் இந்தப் பிரச்சனையை விவாதிக்க வேண்டும் என்று நான் ஆலோசனை கூறுகிறேன்.

நமது கட்சியின் செயலாளர்கள் கிளைக் கூட்டங்களுக்கான அறிக்கைகளைத் தயார் செய்யும் பொழுது அவர்கள் தங்களுடைய குறிப்புப் புத்தகங்களில் இரண்டு விஷயங்களை எழுதியிருக்க வேண்டும்: முதலாவது சாதனைகள், இரண்டாவது குறைபாடுகள் அப்படிச் செய்யும் பொழு[illegible] அவர்கள் இயங்கியலை அறிந்திருக்கிறுர்கள் என்பது[illegible] யாகும்.

ஒன்று இரண்டாகப் பிரிகிறது— இதுவே சர்வ வி[illegible]மான (எங்கும், எதிலும், எப்பொழுதும் நிகழும்) நிகழ்ச் இதுவே இயங்கியல்.

சோவியத்-வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்கள் நல்ல முடிவுக்கு வரமாட்டார்...

### சீன-வியட்னாம் எல்லை யுத்தம்

# சீனாவின் எதிர்த்தாக்குதல் தற்பாதுகாப்பிற்கே!

அண்மையில் சீன-வியட்நாம் எல்லையில் யுத்தம் ஆரம்பித்துள்ளது. இவ் யுத்தத்தை சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகளும், வியட்நாம் ஆளும் கும்பலும் ''சீனாவின் ஆக்கிரமிப்பு'' என்று கூறி உலகத்தை ஏமாற்றும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் மேற்படி யுத்தம் தற்பாதுகாப்பிற்கான எதிர்த்தாக்குதல் என்ற சீனாவின் நிலை உண்மையானதும் சரியானதும் என்பதை உலக அபிப்பிராயம் ஏற்றுக் கொள்கின்றது.

கடந்த இரண்டு வருடங்களாக சீன-வியட்நாம் எல்லையில் வியட்நாம் ஆளும் கும்பலினால் பல எல்லை மோதல் சம்பவங்கள் திட்டமிட்டே உருவாக்கப்பட்டன. சமாதானத்தையும், நட்புறவையும் மதித்து நடக்கும் சீன அரசும், மக்களும் இச் சம்பவங்களையிட்டு உடனுக்கு உடன் வியட்நாம் அரசுக்கு ஆட்சேபனைகளைத் தெரிவித்து இவ்விதமான சம்பவங்களைத் தொடர வேண்டாம் என்றும் கூறி வந்தது. எல்லையில் அல்லது வேறு பிரச்சினைகளில் கருத்து வித்தியாசம் இருந்தால் அவற்றைச் சினேகிதபூர்வமாகப் பேசித் தீர்ப்பது நல்லதாகும் என்ற ஆலோசனையையும் சீன அரசாங்கம் முன்வைத்து வந்தது. இதை ஏற்காத வியட்நாம் அதிகாரக்கும்பல் தனது எசமானான சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆலோசனைக்கு இணங்க மேன்மேலும் எல்லை மோதல்களை உருவாக்கி, சீன விரோத நிலையை வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

கடந்த ஆறுமாதங்களுக்குள் எழுநூறு தடவைகள் திட்டமிட்ட எல்லை மீறல் சம்பவங்களைச் செய்து சீன எல்லைக் கிராமங்களுக்குள் புகுந்து வியட்நாம் படைகள் அட்டாசம் புரிந்துள்ளன. இதனால் எல்லைக் காவல் படையினர், கிராமவாசிகள் உட்பட முன்னூறு பேர்கள் வரை இறந்தும் காயமடைந்தும் உள்ளனர். வியட்நாமின் இத் திட்டமிட்ட எல்லை மீறல்கள் குறிப்பாக சீனாவின் தெற்குப்பகுதி எல்லையிலேயே நடைபெற்று வந்தன. இதன் உள் நோக்கம் சீனாவின் சோசலிச நவீன மயமாக்குதலை சீர்குலைப்பதற்கேயாகும். அத்துடன் தென்கிழக்கு ஆசியாவில் மேலும் பதட்ட நிலையை உருவாக்குவது சோவியத்தின் மேலாதிக்க நோக்கத்திற்கும் வியட்நாமின் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் மிகவும் அவசியமானதாக உள்ளதாலேயே சீன எல்லையில் வியட்நாம் திட்டமிட்ட மோதல்களை உருவாக்கியுள்ளது.

வியட்நாமின் திட்டமிட்ட எல்லை மீறல்களையும், மோதல்களையும் நீண்ட காலமாகச் சகித்து வந்த சீன அரசும், மக்களும், தற்பாதுகாப்பிற்காக எதிர்த்தாக்குதலை தொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டனர். சீனாவின் சகிப்புத் தன்மையையும், பொறுமையையும் ஒரு பலவீனம் எனக்கருதியது வியட்நாம் அதிகாரக்கும்பலின் முட்டாள் தனமேயாகும்.

வியட்நாமின் அத்துமீறல்களுக்கு எதிரான சீனாவின் எதிர்த்தாக்குதல் நியாயமானதேயாகும். இதில் சீன அரசும் மக்களும் எப்பொழுதும் நிதானமாகவே செயல்பட்டு வந்துள்ளனர். 'நாம் தாக்கப்படும் வரை தாக்க மாட்டோம்; நாம் தாக்கப்பட்டால் நிச்சயம் திருப்பித் தாக்குவோம்'' இந் நிலையை சீன மக்கள் கடந்த காலத்தில் கடைப்பிடித்தனர். இன்னும் அந் நிலையிலேயே உள்ளனர்.

சீன மக்களுக்கு வியட்நாமின் ஒரு அங்குல நிலமாவது தேவையில்லை. ஏனெனனில் சீனம் மற்றொரு நாட்டின் மீது மண்ணாசை கொண்ட ஒரு நாடல்ல. இதைக் கடந்த முப்பது ஆண்டுகளில் சீனா உலகிற்குப் புலப்படுத்தி வந்துள்ளது. சீன மக்களும் வியட்நாமிய மக்களும் நீண்ட புரட்சிகரப் போராட்டங்களில் ஒருவரை ஒருவர் ஆதரித்து வந்த மக்களாவர். அத்தகைய புரட்சிகர நட்புறவு கொண்ட மக்களை தமது உலக- பிராந்திய மேலாதிக்கத்திற்காக சோவியத்-வியட்நாம் ஆளும் கும்பல்கள் திட்டமிட்டுப் பிரிக்க முயலுகின்றன. அதே போல் மக்கள் சீனத்தின் சோசலிச வளர்ச்சியை தடை செய்வதற்கும், சீன விரோதப் பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் வியட்நாம் ஒரு கருவியாக சோவியத் யூனியனால் பாவிக்கப்படுகின்றது.

வியட்நாமில் உள்ள சீன வம்சாவளியினரைக் கொடுமைப்படுத்தி இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டோரை துரத்தியது; கம்போச்சிய எல்லை மோதல்களை உருவாக்கி பின் ஜனநாயக கம்போச்சிய அரசை கவிழ்ப்பதற்கு தனது ஒன்றரை லட்சம் துருப்புக்களை கம்போச்சியாவிற்குள் அனுப்பி, அப்பட்டமான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது போன்ற நடவடிக்கைகள் வியட்நாம் ஆளும் கும்பலின் சுயரூபத்தை வெளிச்சமாக்கி உள்ளது. இது போன்ற நடவடிக்கையை சீன எல்லையிலும் காட்டி விடலாம் என்ற வியட்நாமின் வீண் முயற்சிக்கு தகுந்த பதிலடி கிடைத்துள்ளது. இப் பதிலடியில் சீன மக்களினதும், சீன அரசினதும் நிலை மிகவும் சரியானது என்பதே உலக அபிப்பிராயம்.

## வெறும் வாக்குறுதிகளால் வேலையின்மையைப் போக்க முடியாது!

### பதுளையில் தோழர் செந்தில்

வருடாவருடம் வேலை வழங்கப்படும் தொகையினரிலும் பார்க்க பல பத்து மடங்கினர் வேலை இல்லாதோரின் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு அரசாங்கத்தினதும் பிரதான வாக்குறுதி வேலை இன்மையை ஒழிப்பது என்பதுதான். ஆனால் எந்த அரசாங்கமும் வேலை இன்மை என்ற பிரச்சினையைப் ஒழித்தது கிடையாது. கடந்த ஐக்கிய முன்னணி அரசு தனது அமைப்பாளர்களின் மூலம் வேலை வழங்கி பிரச்சினையைத் தீர்க்க முயன்றது. அதன்பலன் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்குத் தான் வேலை வழங்க முடிந்தது. தற்போதைய அரசு வேலை வங்கிப் படிவங்கள் மூலம் வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்த்து விடப் போவதாகக் கூறி வருகிறது. இவ் வேலை வங்கிப் படிவங்களின் மூலமும் ஒரு குறிப்பிட்ட சிலருக்குத் தான் வேலை வழங்க முடியும் என்பதை இன்று சகலரும் நன்கு உணர்ந்து விட்டனர். எப்படித்தான் ஆட்சியினர் வாக்குறுதிகள் வழங்கினாலும் வேலை இல்லாதோரின் பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலைமையே உள்ளது. காரணம் இன்று வேலை இல்லாதோரின் தொகை பதினைந்து லட்சத்தைத் தாண்டி விட்டது.

மேற்கண்டவாறு கடந்த 28-1-79ல் பதுளை ஜெயா வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) சார்பில் பேசிய தோழர் வே. செந்திவேல் கூறினார்

தோழர் செந்தில் தொடர்ந்து பேசுகையில், வேலை வழங்கும் வேகத்திலும் பார்க்க வருடா வருடம் வேலை இல்லாதோரின் தொகை கூடி வருகின்றது. இதற்குக் காரணம் நமது நாட்டின் தவறான பொருளாதார அமைப்பும் அதைப் பாதுகாத்து நிற்கும் அரசியல் அமைப்பு முறையுமாகும். இந்த அமைப்புக்குள் சாதாரண மக்கள் எவ்வித நன்மையும் பெற முடியாது. நமது நாட்டில் இளைஞர்தொகையும் அவர்களது இளம் சக்தியும் விரயமாக்கப்படுகின்றது, திட்டமிட்ட முழுச்சமுதாய நோக்குடன் கூடிய பொருளாதார அமைப்பு முறை நமது நாட்டில் இல்லை. ஒரு சிறு பகுதியினரின் மேம்பாட்டிற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் பொருளாதார அமைப்புநடைமுறையில் உள்ளது. அதைப் பாதுகாப்பதற்கான அரசியல் அமைப்பு முறையும், இவற்றிக்கு சேவை செய்யும் கல்வி அமைப்பு முறையும் தான் இன்று நம் நாட்டில் உள்ளது. இந்த உண்மைகளை நம் நாட்டு இளம் சந்ததி நன்கு உணர்ந்து இன்றைய பொருளாதார—அரசியல் அமைப்பு முறைகளை அடிப்படையில் மாற்றி அமைக்கும் இயக்கங்களை முன்னெடுப்பதற்கு முன்வரல் வேண்டும் என்றும் கூறினார்.

## அமிர்தலிங்கம் சோவியத்-வியட்னாம் அடிவருடியா?

தமிழர் கூட்டணியின் செயலாளர்நாயகம் அ. அமிர்தலிங்கம் சீன-வியட்நாம் எல்லை யுத்தத்தை ''சீன ஆக்கிரமிப்பு'' எனக் கூறி சீனாவைக் கண்டித்துள்ளார். தனது கண்டனத்தை தமிழ் இனத்தின் சார்பானதாகவும் கூறியுள்ளார். தமிழ் இனத்தின் சார்பாக உண்மைகளுக்கு மாறான அறிக்கையை விடுவதற்கு அமிர்தலிங்கத்திற்கு என்ன யோக்கியதை இருக்கின்றது.

அவரது அறிக்கையில் சோவியத்- கியூப டைல் அடிப்பதைத்தான் காண முடிகின்றது. ஏனெனில் மேற்படி எல்லை யுத்தத்தை சோவியத்-கியூப சார்பான நாடுகளும் அவர்களது அடிவருடிகளும் தான் ''சீன ஆக்கிரமிப்பு'' என்று கூறி வருகின்றனர். ஏனைய பெரும்பாலான நாடுகளும், மக்களும் ''தற்பாதுகாப்பிற்கான எதிர்த்தாக்குதல்'' என்ற சீனாவின் நிலையை ஏற்றுக் கொள்கின்றனர்.

சோவியத்-கியூபப் படைகள் ஆபிரிக்காவில் ஆக்கிரமிப்புக்கள் செய்த போதும் கடந்த மாதம் ஒன்றரை லட்சம் துருப்புக்களைக் கொண்டு சென்று ஜனநாயகக் கம்பூச்சியாவை வியட்நாம் அப்பட்டமாக ஆக்கிரமித்த போதும் அமிர்தலிங்கம் எங்கே போய் இருந்தார். அப்பட்டமான ஆக்கிரமிப்புக்களை வியட்நாம் படைகள் ஏனைய நாடுகளில் செய்த போது அமிர்தலிங்கம் கண்ணுறங்கி விட்டார் போலும். இன்று அவர் சீன வாந்தி எடுப்பது அவரது சோவியத் அடிவருடித்தனத்தை அம்பலமாக்கியுள்ளது அவர் எவ்வளவு தான் சோவியத் அடிவருடியாக மாறினாலும் தமிழ் மக்களும் குறிப்பாக இளைஞர்களும் ஒரு போதும் அந் நிலைக்குச் செல்ல மாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு சீனாவினது தேசிய, சர்வதேசிய நிலைமைகள் பற்றிய உண்மைகள் மிகத் தெளிவானதாகும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## சுதந்திரம் யாருக்கு?

தாக்கத்தை உருவாக்கி உள்ளது. பல்லாயிரக்கணக்கில் நாட்டை விட்டு இளைஞர்கள் வெளியேறி வெளிநாடுகளில் உழைப்பைத் தேடி அலைகிறார்கள். முன்பெல்லாம் மூளை உழைப்பாளிகள் நாட்டை விட்டுச் சென்றார்கள். இன்று உடல் உழைப்பாளிகளும் பல்லாயிரக்கணக்கில் வெளிநாடுகளை நோக்கி செல்கின்றனர். மக்களின் அதிருப்தி, வெறுப்பு, விரக்தி வளர வளர ஆளும் வர்க்கம் தனது சுதந்திரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் அடக்கு முறைகளையும், ஆயுதப்படைகளையும் மக்களுக்கு எதிராக நிறுத்தி வைத்திருக்கின்றது. அதுமட்டுமன்றி தங்களது அடக்குமுறைகளுக்கு எதிராக 90 வீதமான தமிழ் சிங்கள மக்கள் ஐக்கியப்பட்டு கிளர்ந்தெழாத வண்ணம் இன, மத, மொழி வேறுபாடுகளைத் தூண்டி வளர்த்து வருகின்றது. இதன் மூலம் தனது சுதந்திரத்தை பாவித்து தேசிய இன அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு அவர்களது சுதந்திரத்தையும் பறித்து வருகின்றது. இவை எல்லாம் சுதந்திரத்தின் பெயரால் நடைபெறுகின்றது.

நம் நாட்டில் சுரண்டுவதற்கு சுதந்திரம்உண்டு. சுரண்டலை எதிர்ப்பதற்குச் சுதந்திரம் கிடையாது. மக்களை அடக்கி ஆள்வதற்கு சுதந்திரம் உண்டு. ஆனால் உழைப்பாளிகள் ஊதியத்தை உயர்த்திக் கேட்பதற்கு சுதந்திரம் கிடையாது. இவ்வாறு ஒவ்வொரு அம்சத்திலும் ஆளும் வர்க்கத்தின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் போது ஆளப்படும் வர்க்கங்களின் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. இதை நமது நாட்டின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கூர்ந்து அவதானித்தால் நன்கு புலப்படும். எனவே சுதந்திரம் ஆளும் வர்க்கத்திற்கு மட்டும் உரியதொன்றாகவே இருக்கின்றது.

ஆளும் வர்க்கத்திற்கு மட்டும் உரியதாக உள்ள சுதந்திரத்தை ஆளப்படும் மக்களுக்கான சுதந்திரமாக மாற்ற முடியாதா? என்றகேள்வி எழுகின்றது. நிச்சயம் மாற்ற முடியும்என்றேநாம்கூறுகின்றோம். ஆளப்படும் வர்க்கம் ஆளும் வர்க்கத்திற்கு எதிரான வர்க்கப் போராட்டத்தில் இன, மத, மொழி, வேறுபாடின்றி இணைந்து ஆளும் வர்க்கத்தை தோற்கடிப்பதன்மூலம் தொழிலாளிவர்க்கமும் விவசாயிகளும் ஏனைய சக்திகளும் தம்முடைய சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும் அங்கே ஆளும் வர்க்கத்தினால் அனுபவிக்கப்பட்ட சகல சுதந்திரங்களும் பறிக்கப்பட்டு ஏகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள்- விவசாயிகள், புத்திஜிவிகள், மற்றும் உழைக்கும் சகல பிரிவு மக்களுக்கும் உண்மையான சுதந்திரம் உத்தரவாதம் செய்யப்படும் இனரீதியான ஒடுக்குமுறைகளுக்கும் அங்குதான் ஒரு முடிவு ஏற்படுத்தப்படும். அவ்விதமான மக்கள் தமது அடிப்படையான சுதந்திரத்தை வென்றெடுக்க இன்று ஆளப்படும் வர்க்கமாக உள்ள நாம் விடுதலைப் போராட்ட அணியில் அணிவகுத்து முன் செல்ல முன்வர வேண்டும். அதுவே உண்மையான சுதந்திரத்தை மக்கள் பெற்றுக்கொள்வதற்கான பாதை அன்றி வேறு பாதை கிடையாது.

1-ம் பக்கத் தொடர்ச்சி

மாணவர்கள் பாதிக்கப்படாத விதத்திலும் மாற்றி அமைத்து நியாயமான தீர்வைஏற்படுத்த வேண்டும் என்றேதமிழ்மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

மாணவர்களினதும்- இளைஞர்களினதும் தரப்படுத்தலுக்கு எதிரான இயக்கத்தில் கூட்டணியின் செயலாளர்நாயகம் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இளைஞர்கள் — மாணவர்கள் மத்தியில் சந்தேகங்களை எழுப்பியுள்ளது, தமக்கும் பகிஷ்கரிப்புக்கும் தொடர்பில்லை என்று அமிர்தலிங்கம் கூறியது யாரைச் சாந்தப்படுத்த அவ்வாறு கூறினார் என்பது கேள்வியாகவே உள்ளது. முன் கூட்டியே பகிஷ்கரிப்பு தெரிந்திருந்தால் தக்க நடவடிக்கை எடுத்திருப்போம் என்று அரசாங்கத்திற்கு அவர் கூறியதன் நோக்கம் என்ன? உண்மையில் தமது வர்க்க சகோதரர்களான யூ. என. பி.க்கு எதிராக எந்த இயக்கத்தையும் நடத்தத் தாம் தற்போது தயார் இல்லை என்பதைத்தான் அவரது பேச்சுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. அதே வேளை தம்மோடு முரண்பட்டுக் கொண்டுள்ள இளைஞர்களை இனங்காட்டி நாங்கள் அல்ல அவர்கள் தான் என்று அரசாங்கத்திற்கு சொல்கிறார். எதிர்க்கட்சித் தலைவர். இவரது பேச்சுக்கள் அறிக்கைகள் அமிர்தலிங்கம் யார் பக்கம், அரசின் பக்கமா? அல்லது மாணவர்களின்பக்கமா? என்ற பலமான சந்தேகத்தை தமிழ் மக்கள்-இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

ப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 93, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். வெளியிடுபவர்: சி. நவரத்தினம் 15/1, மின்சார நிலையவீதி மேல் மாடி யாழ்ப்பாணம்